முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், தி.மு.க.வில் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்க அமைக்கப்பட்ட கனிமொழி எம்.பி. தலைமையிலான குழுவினர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று

மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து தி.மு.க. தேர்தல் அறிக்கை இருக்கும்

சென்னை, ஜன.24–

நடைபெற இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில், மக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து தி.மு.க. தேர்தல் அறிக்கை இருக்கும் என்று கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

தி.மு.க.வில் நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கு கட்சியின் துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் ஆலோசனை கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது.

கனிமொழி எம்.பி. தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான தி.மு.க. செய்தி தொடர்பு தலைவர் டி.கே. எஸ். இளங்கோவன், விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், சொத்து பாதுகாப்புக்குழு செயலாளர் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, வர்த்தகர் அணி துணை தலைவர் கோவி.செழியன், ராஜேஸ்குமார் எம்.பி., மாணவர் அணி செயலாளர் எழிலரசன் எம்.எல்.ஏ., அயலக அணி செயலாளர் எம்.எம்.அப்துல்லா, மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ஆகியோர் கலந்துகொண்டு தேர்தல் அறிக்கை தயாரிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தினார்கள்.

இந்த கூட்டம் முடிந்தவுடன் கனிமொழி எம்.பி. நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று அங்கு இருக்கிற கூடிய தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், கல்வியாளர்கள் மற்றும் மக்களின் கோரிக்கைகளை கேட்டறிவோம். பின்னர் மீண்டும் சென்னைக்கு வந்து இந்த தேர்தல் அறிக்கையை முடிவு செய்வதற்கான பணிகளை தொடங்குவோம்.

தற்போது எந்தெந்த ஊர்களுக்கு முதலில் பயணம் செய்கிறோம் என்ற அந்த பட்டியலை இன்று முடிவு செய்து இருக்கிறோம். இந்த பட்டியலை முதலமைச்சரிடம் காண்பித்து ஒப்புதல் பெற்ற பின்னர் அந்த ஊர்களுக்கு பயணம் செய்வோம்.

தேர்தல் அறிக்கையை முதல் அமைச்சரிடம் கொடுத்து அவர் வெளியிடும்போது அதில் உள்ள அம்சங்கள் உங்களுக்கு தெரிய வரும். தேர்தல் அறிக்கைக்கு பொதுமக்கள் யோசனை தெரிவிக்க தொலைபேசி எண், இமெயில் முகவரி போன்றவை ஒரிரு நாளில் அறிவிக்கப்படும்.

இந்த முறை தி.மு.க. தேர்தல் அறிக்கை, இந்த தேர்தலுக்கான கதாநாயகியாகவும் இருக்கலாம். இவ்வாறு கனிமொழி எம்.பி. கூறினார்.

கனிமொழி எம்.பி. பேட்டி

கட்டிடங்களின் மேற்கூரையில் 3 கிலோ வாட் வரையில் 'சோலார்' அமைக்க சாத்தியக் கூறு ஒப்புதல் தேவை இல்லை

சென்னை, ஜன.24

கட்டிடங்களின் மேற்கூரையில் 3 கிலோ வாட் வரையில் 'சோலார்' அமைக்க சாத்தியக் கூறு ஒப்புதல் தேவை இல்லை என்று தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிட்டப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவுறுத்தலின்படி நிதி, மனிதவள மேலாண்மை மற்றும் மின்சார துறை அமைச்சரின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அடிப்படையிலான சூரிய மின் உற்பத்தியை (சோலார்) மேம்படுத்த அனைத்து நடவடிக்கைளையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தற்போது, தமிழ்நாட்டில் சூரிய மின் உற்பத்தியின் நிறுவப்பட்ட திறன் 7 ஆயிரத்து 372 மெகாவாட்டாக உள்ளது. இவற்றில் 526 மெகாவாட் கட்டிட மேல் கூரையில் பொருத்தப்படும் சூரிய மின் உற்பத்தி நிலையங்களாக அமைக்கப்பட்டு உள்ளது. நமது மாநிலத்தில் கட்டிட மேல் கூரையில் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து சூரிய மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் வகையில், விண்ணப்ப செயல்முறை எளிமைப்படுத்தப்பட்டு உள்ளது. தற்போது தாழ்வழுத்த மின் இணைப்புகளில் மேல்கூரை சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக செயலாக்கப்படுகின்றன.

இந்த செயல் முறையை மேலும் விரைவுபடுத்த, 3 கிலோ வாட் வரையிலான சூரிய மின் சக்தி திறன் அல்லது மின் இணைப்பில் அனுமதிக்கப்பட்ட மின் திறன் இரண்டில் எது குறைவோ, அதற்கு ''சாத்தியக்கூறு ஒப்புதல்'' பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. தங்கள் மின் இணைப்பு உள்ள கட்டிடங்களின் மேல் கூரையில் சூரிய மின் நிலையங்கள் நிறுவ விரும்பும் நுகர்வோர் விண்ணப்பத்தை இணையதளம் வாயிலாக பதிவு செய்து இந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு

திருப்போரூர் – மானாமதி – சிறுதாவூர் – செம்பாக்கம் வழியாக செங்கல்பட்டு செல்லும் புதிய பேருந்து வழித்தட எண் 50 எஸ் எனும் புதிய பேருந்தை மாவட்ட கலெக்டர் ராகுல்நாத் திருப்போரூர் எம்.எல்.ஏ. எஸ் எஸ் பாலாஜி ஆகியோர் துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் பேரூராட்சி தலைவர் தேவராஜ், வேளாண் ஆத்ம குழு தலைவர் பையனூர் சேகர், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

21 ஆயிரம் ஆவணங்கள் பதிவு: ஒரே நாளில் ரூ.168 கோடி ஈட்டிய பதிவுத்துறை

சென்னை, ஜன.24–

ஆவணங்களின் பதிவு மூலம் ஒரே நாளில் பதிவுத்துறை ரூ.168 கோடி ஈட்டியுள்ளது.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலா சாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:– தை பொங்கலுக்கு பின்வரும் நாட்களில் பதிவுத் துறையில் அதிக பதிவுகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனால், 31.1.2024 வரை அனைத்து வேலை நாட்களிலும் கூடுதலான டோக்கன் வழங்க உத்தரவிடப்பட்டது.

இதனை உறுதி செய்யும் வகையில் 22.1.24 (நேற்று முன்தினம்) அன்று மட்டும் 21 ஆயிரத்து 4 ஆவணங்கள் பதியப்பட்டு அதன் மூலம் அரசுக்கு ரூ.168.83 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. புதிய கூட்டு மதிப்பின் அடிப்படையின் கீழ் அன்று சென்னையில் பதியப்பட்ட 137 அடுக்குமாடி குடியிருப்பு பதிவுகளும் அதன்மூலம் பெறப்பட்ட ரூ.12 கோடி வருவாயும் இதில் அடங்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தைப்பூசம், குடியரசு தினம் – 4 நாட்கள் தொடர் விடுமுறை: தமிழகம் முழுவதும் 580 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, ஜன.24–

தொடர் விடுமுறையையொட்டி தமிழகம் முழுவதும் 580 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது.

தைப்பூச விழா (நாளை), குடியரசு தினம் (நாளை மறுதினம்), 27ந் தேதி (சனிக்கிழமை), 28 (ஞாயிற்றுக்கிழமை) என தொடர்ச்சியாக 4 நாட்கள் விடுமுறை வருகிறது. இதையொட்டி சென்னையில் படிப்பு, பணி நிமித்தமாக தங்கி உள்ளவர்கள் சொந்த ஊர்களுக்கு செல்ல திட்டமிட்டுள்ளனர். எனவே தென்மாவட்ட ரெயில்கள் அனைத்திலும் முன்பதிவு டிக்கெட்டுகள் விற்று தீர்ந்துள்ளது.

காத்திருப்போர் பட்டியல் நீண்டுள்ளது. 'தட்கல்', பிரீமியம் தட்கல் டிக்கெட்டுகளை பயணிகள் எதிர்நோக்கி உள்ளனர். இந்த நிலையில் தமிழ்நாடு அரசு சார்பில் சிறப்பு பஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குனர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தைப்பூசம், குடியரசு தினத்தை முன்னிட்டு நாளை (வியாழக்கிழமை) முதல் 28ந் தேதி வரை தொடர் விடுமுறை நாட்கள் வருவதால், இன்றும், நாளையும் சென்னை கோயம்பேடு, கிளாம்பாக்கம் மற்றும் பிற இடங்களில் இருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் தினசரி இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையில் இருந்து தமிழகத்தின் முக்கிய இடங்களுக்கு இன்று மற்றும் நாளை தினசரி இயக்க கூடிய பஸ்களுடன் கூடுதலாக 405 சிறப்பு பஸ்களும் மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து அதாவது கோவை, மதுரை, நெல்லை, திருச்சி, சேலம் போன்ற இடங்களில் இருந்து முக்கிய இடங்களுக்கும் மற்றும் பெங்களூருவில் இருந்து பிற இடங்களுக்கும் 175 சிறப்பு பஸ்கள் என ஆக மொத்தம் 580 சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இன்று 5 ஆயிரத்து 722 பயணிகளும், நாளை 7 ஆயிரத்து 222 பயணிகளும் சென்னையில் இருந்து பயணம் மேற்கொள்வதற்காக முன்பதிவு செய்துள்ளனர். ஞாயிற்றுக்கிழமை அன்று 15 ஆயிரத்து 669 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் தங்களது பயணத்திற்கு முன்பதிவு செய்து பயணிக்கலாம்.

இந்த சிறப்பு பஸ்கள் இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பஸ் நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியை பயன்படுத்தி தங்களது பயணத்தை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்திய மருத்துவர்கள் கூட்டுறவு மருந்துசெய் நிலையம் மற்றும் பண்டகசாலை (வரையறுக்கப்பட்டது) X-185

No. 34-37, கல்வி கிருஷ்ணாபுரத்தெரு சாலை, நீதிபுலாஸ்பேயர், சென்னை-41. Ph: 044-24521029, 24520189 Mail: impcoopsx185@gmail.com, impcoops.pu@gmail.com

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இம்காப்ஸ் நிறுவனத்திற்கு தேவையான பகமையான மூலிகைகள் (**Green Drugs**) உலர்ந்த மூலிகைகள் (**Raw Drugs**) பல வகையான எண்ணெய் வகைகள், நெய், தேன், வெல்லம் மற்றும் பட்ட பாட்டில்கள், அட்டைப் பெட்டிகள் போன்றவற்றை சப்ளை செய்வதற்கு **01.04.2024** முதல் **30.09.2024** வரையிலான ஆறு மாத காலத்திற்கு மூடு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், அதற்கு உரிய படிவத்தில் இம்காப்ஸ், சென்னை-41 சார்பாக அதன் தலைவர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்த படிவத்தின் விலை ரூ.**590/-** (GST உட்பட) அஞ்சல் செலவு தனி. ஒப்பந்த படிவங்கள் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பூர்த்தி செய்யப்பட ஒப்பந்த படிவம் மற்றும் மாதிரி மூலப்பொருட்கள் (Samples) சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் **20.02.2024** மாலை **04.00** மணி வரை மட்டும். படிவங்கள் அனைத்தும் பதிவு அஞ்சல் அல்லது கூரியர் முலமாக மட்டும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **22.02.2024** காலை **11.00** மணியளவில் திறக்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட இறுதியான டெண்டர் விவரங்கள், ஐவது நிறுவன கொள்முதல் குழுக்கூட்டத்திற்குப் பின்னரே சம்மந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்படும்.

மேலும் சப்ளை சரக்குகளை சப்ளை செய்வதற்குரிய படிவத்தினை இம்ப்காப்ஸ் இணையதளத்தில் **www.impcops.org** இருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

(தலைவர் அவர்களின் ஆணையிப்படி)

நாள்: **24.01.2024** செயலாளர் பொறுப்பு இம்காப்ஸ்

இ-ஏல அறிவிப்பு
(வெள்ளத் தண்ணீரால் சேதமடைந்த 12 மின்சார மோட்டார் சைக்கிள்கள்)

M/s. **ஆரோஹனா எண்டர்பிரைஸ் நிறுவனத்திற்கு** (மேக் ஐஸஸ் அன்ட் எல்ஏ பிரைவேட் லிமிடெட்டால் ஆய்வு செய்யப்பட்டது) சொந்தமான சேதமடைந்த 12 மின்சார மோட்டார் சைக்கிள்களை "உள்ளது உள்ளபடி" மற்றும் "மொத்த அடிப்படையில்" விற்பனை செய்ய இ-ஏல விண்ணப்பங்கள் விருப்பமுள்ள வாங்குபவர்களிடம் இருந்து வரவேற்பு கிடின்றன. திரு. நிதின் குமார் அவர்களை 88103 31841 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொண்டு முறையான அனுமதி பெற்று அவற்றை **24.01.2024 முதல் 01.02.2024 அன்று வரை** மேற்கண்ட பொருட்களை 1ஏ, பட்டுக்கோட்டை அழகிரி தெரு, தரமணி, சென்னை என்ற முகவரியில் பார்வையிடலாம். இ-ஏலத் தேதி 02/02/2024. இ - ஏல படிவத்திற்கு திருமதி. குஷி அவர்களை 9990857386ல் தொடர்பு கொள்ளவும்.

சால்வர் செட்டில்லர்ஸ் பிரைவேட் லிமிடெட் (ஏலதாரர்கள்)

முகவரி: 203, 2வது தளம், உஷா கிரன் பில்டிங், ஆசாத்பூர் வணிக வளாகம், டெல்லி110033

அல்லது www.salvorsettlers.com **என்ற இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.**

இ - ஏலப் படிவத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 02/02/2024

மதியம் 12.30 மணிக்கு முன்.

kotak Kotak Mahindra Bank — கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் — **ஆன்லைன் இ-ஏல முறையில் சொத்து விற்பனை**

பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி.), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை : 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
(லேண்ட் மார்க் : சிட்ரான் கார் ஷோரூம் அருகில் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அடுத்தது)

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து நீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து நீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு

பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "PNBHFL" என்று குறிப்பிடப்படும்) 21.09.2017 அன்று **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு** ஆதரவாக "PNBHFL" கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி கோம்பிஎல் என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. பி. பிரகாஷ் அரவிந்த் மற்றும் திருமதி. விஜயலட்சுமி பி** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.HOU/CHE/0916/319678– தாகிய 12.06.2017 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.34,17,746/–(ரூபாய் முப்பது நான்கு லட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று நாற்பத்தாறு மட்டும்)** மற்றும் 13.06.2017 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை "எங்கு எப்படி உள்ளதோ அப்படியே" என்ற அடிப்படையில் **15.02.2024 அன்று** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 14.02.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

சொத்து விவரம்: சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், 890 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட். கேஎல்என் ஹோம்ஸ், எண்.S1, 2வது தளம் மற்றும் கார் பார்க்கிங், 1807 சதுர அடியில் பிரிவுபடாத பங்கு நிலம் 438 சதுர அடி உட்பட. எஸ்.எண். 230/4, வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் மனை எண்.19, சரஸ்வதி நகர் விரிவு, வரதராஜபுரம், அதன் எல்லைகள் : கிழக்கு : கால் மனை, மேற்கு : 20 அடி சாலை, வடக்கு : மனை எண்.20, தெற்கு : மனை எண்.18. பாதுகாக்கப்பட்ட சொத்தை மீட்டெடுக்க, கால அவகாசம் உள்ளதால், சர்பாசி சட்டத்தின் பிரிவு 13ன் துணைப் பிரிவு 8ன் விதிகளுக்கு இணங்க கடன்தாரரின் கவனத்திற்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிஸேஷன் (+91 9941016600), திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி: 24.01.2024 — **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**

kotak Kotak Mahindra Bank — கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் — **சுவாதீன அறிவிப்பு**

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G- பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051
கிளை அலுவலகம்: 2வது தளம், ஜீனியஸ் பவன், அவினாசி சாலை, கோயம்புத்தூர் 641 018

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுக் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து நீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆப் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து நீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 3வது விதி விதிமுறைக்கு ஏற்ப, கீழுக்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, திரும்ப செலுத்தும் நாள் வரையிலான வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்களை மேற்கொண்ட நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். எனினும், மேற்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் /உடன்கடன்தாரர்கள் பாக்கித் தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள்,உடன்கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழுக்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தில் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிகளுக்கு இணங்கவும், கீழுக்கண்ட தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாக, பொதுமக்களுக்கு பொதுவாக எச்சரிக்கப்படுவது யாதெனில், அடையாளம் சுவாதீனம் எடுத்துக் கொண்ட மேற்சொன்ன அசையா சொத்து கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித விலைவங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் எடுபெற்ற ஆவணங்களை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பிரிவு 13(2)–ன் கீழ் **டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பிய தேதி, நிலுவைத் தொகை, சொத்தின் விவரம், கடன்தாரர்கள் விவரம் மற்றும் செலுத்த வேண்டிய தொகை மற்றும் சுவாதீனம் எடுத்த தேதி ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

கடன்தாரர், உடன்கடன்தாரர்/ உத்தரவாததாரர் பெயர் மற்றும் முகவரி கடன் கணக்கு எண். கடன் தொகை	அசையா சொத்தின் விவரம்	1. சுவாதீனத் தேதி 2. சுவாதீன வகை 3. டிமாண்ட் நோட்டீஸ் தேதி 4. நிலுவைத் தொகை ரூ.
திரு. சண்முகம்மாள் எஸ். க/பெ. மறைந்த திரு. சுந்தராராஜு முகவரி: எண். 5/73, தேசவளாசர் காலனி, நல்லம்பட்டி, அடியனூர்த்து, நாகல் நகர், திண்டுக்கல் 624003 & திரு. வேல்முருகன் எஸ்., த/பெ. மறைந்த திரு.சுந்தராராஜு & திருமதி.சுதா. வி, க/பெ. திரு. வேல்முருகன் எஸ் & M/S வெற்றி டீக்கடை, அதன் உரிமையாளர் சண்முகம்மாள் எஸ் முகவரி: எண்.1/620, அன்பு வளாகம், கடை வீதி, துவக்க நடுநிலைப் பள்ளி எதிரில் வையம்பட்டி அஞ்சல், மணப்பாறை தாலுக்கா, திருச்சி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு– 662130 அனைவரது முகவரி: எண்.146, இந்திரா நகர் மஸ்தான் தெரு, மணப்பாறை அஞ்சல், திருச்சி தமிழ்நாடு 624306 அனைவரது முகவரி: மனை எண். 15 பழைய எஸ். எண். 542/2புதிய எஸ். எண். 542/46, அடியனூர்த். நாகல் நாயக்கன்பட்டி, திண்டுக்கல், தமிழ்நாடு 624003. கடன் கணக்கு எண்: 6041075103231152. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை: ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்).	**அடமான சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.** திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை சார் பதிவு மாவட்டம், வடமதுரை கிராமம், பழைய நத்தம் சர்வே. எண். 1444/7, புதிய நத்தம் சர்வே. எண். 1444/7ஆ, விஸ்தீரணம் கிழக்கு மேற்காக 89 அடி இரண்டு பக்கமும் மற்றும் வடக்கிலிருந்து தெற்காக 27.5 அடி இரண்டு பக்கமும். விஸ்தீரணம் 2447.5 சதுர அடி. மேற்குப் பக்கம் விஸ்தீரணம் கிழக்கிலிருந்து தெற்காக 47 அடி இரண்டு பக்கமும் மற்றும் வடக்கிலிருந்து தெற்காக 27.5 அடி இரண்டு பக்கமும். மொத்த விஸ்தீரணம் 1292.5 சதுர அடி. எல்லைகள் : கிழக்கு : மலர்தேவி ஆசாரிக்கு சொந்தமான சொத்து. மேற்கு : துரைராஜுக்கு சொந்தமான சொத்து. வடக்கு : பொதுப் பாதை. தெற்கு : எஸ். பெருமாள் ஆசாரிக்கு சொந்தமான வீடு, காளியப்பன் ஆசாரிக்கு சொந்தமான மனை. அடமானதாரர் பெயர் : திரு. தெய்வசிகாமணி எம்.	1. 19.01.2024 2. அடையான சுவாதீனம் 3. 26.10.2023 4. 25.10.2023 அன்று செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.20,19,436/– (ரூபாய் இருபது லட்சத்து பத்தொன்பதாயிரத்து நானூற்று முப்பத்தாறு மட்டும்) மற்றும் 26.10.2023 முதல் முழு தொகையும் செலுத்தும் நாள் வரையிலான பொருந்தக்கூடிய வட்டி
திரு. கலைவாணன் டி (கடன்தாரர் திரு. தெய்வசிகாமணி எம் (லேட்) அவர்களின் மகன் மற்றும் சட்டப்பூர்வ வாரிசு) & திருமதி புஷ்பம் (கடன்தாரர் திரு. தெய்வசிகாமணி எம் (லேட்) அவர்களின் மனைவி மற்றும் சட்டப்பூர்வ வாரிசு) & திருமதி கலையரசி (கடன்தாரர் திரு. தெய்வசிகாமணி எம் (லேட்) அவர்களின் மகள்) & திருமதி கலைவாணி (கடன்தாரர் திரு. தெய்வசிகாமணி எம் (லேட்) அவர்களின் மகள்) அனைவரது வசிப்பிடம்: எண். 12/3/19, மேற்கு தேரடி தெரு, வடமதுரை, பேடைத்தூர், திண்டுக்கல், தமிழ்நாடு 624802 அனைவரது முகவரி: கதவு எண். 1/50 காமாட்சியம்மன் கோவில் தெரு, வடமதுரை (அஞ்சல்) பேடைத்தூர் தாலுக்கா, திண்டுக்கல், தமிழ்நாடு 624802 கடன் கணக்கு எண்: 6041075105973 09. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை: ரூ.14,50,0000/– (ரூபாய் பதினான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்).	**அடமான சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும்.** திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வடமதுரை சார் பதிவு மாவட்டம், வடமதுரை கிராமம், பழைய நத்தம் சர்வே. எண். 1444/7, புதிய நத்தம் சர்வே. எண். 1444/7ஆ, விஸ்தீரணம் கிழக்கு மேற்காக 89 அடி இரண்டு பக்கமும் மற்றும் வடக்கிலிருந்து தெற்காக 27.5 அடி இரண்டு பக்கமும். விஸ்தீரணம் 2447.5 சதுர அடி. மேற்குப் பக்கம் விஸ்தீரணம் கிழக்கிலிருந்து தெற்காக 47 அடி இரண்டு பக்கமும் மற்றும் வடக்கிலிருந்து தெற்காக 27.5 அடி இரண்டு பக்கமும். மொத்த விஸ்தீரணம் 1292.5 சதுர அடி. எல்லைகள் : கிழக்கு : மலர்தேவி ஆசாரிக்கு சொந்தமான சொத்து. மேற்கு : துரைராஜுக்கு சொந்தமான சொத்து. வடக்கு : பொதுப் பாதை. தெற்கு : எஸ். பெருமாள் ஆசாரிக்கு சொந்தமான வீடு, காளியப்பன் ஆசாரிக்கு சொந்தமான மனை. அடமான